பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**08 05 2026　　FRIDAY　　6.45 AM**

## மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. பெரும்பான்மையை உறுதி செய்யாமல் யாரையும் ஆட்சி அமைக்க அழைக்க முடியாது என தமிழக ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கூறியுள்ளார்.

2. தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் தேக்க நிலை குறித்து அரசியல் கட்சிகள் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டு வருகின்றன.

3. தமிழகத்தில் பிளஸ் டூ தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்படுகின்றன.

4. மாநிலத்தில் 19 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணி - பெங்களூரு அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>>>

பெரும்பான்மையை உறுதி செய்யாமல் யாரையும் ஆட்சி அமைக்க அழைக்க முடியாது என தமிழக ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, ஊடக நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், தவெக தலைவர் திரு விஜய் முதலமைச்சராக பதவியேற்பதை தாம் எந்த வகையிலும் தடுக்கவில்லை என்று கூறினார்.

பெரும்பான்மை இல்லாத கட்சியை எப்படி ஆட்சி அமைக்க அழைக்க முடியும் என்று அவர் கேள்வி எழுப்பினார்.

பெரும்பான்மைக்கு தேவையான உறுப்பினர்கள் எண்ணிக்கையுடன் உரிமை கோரினால், தாம் உடனடியாக ஆட்சி அமைக்க அழைப்பு விடுப்பதற்கு தயாராக இருப்பதாகவும் அவர் விளக்கம் அளித்தார்.

பெரும்பான்மை இல்லாதது திரு விஜய்க்கு மட்டும் பிரச்சினை அல்ல எனவும், ஒட்டுமொத்த தமிழகத்திற்கு அது பிரச்சினையை உருவாக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

போதுமான உறுப்பினர்களின் ஆதரவு இல்லாமல், சிறுபான்மை அரசு அமைப்பது குதிரைபேரத்திற்கு வழிவகுக்கும் எனவும், அதை அனுமதிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

பெரும்பான்மை பலத்துடன் எந்த கட்சி ஆட்சி அமைக்க உரிமை கோரினாலும், அதை ஏற்க தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

**118** உறுப்பினர்களின் பட்டியலை யார் வழங்கினாலும் அதை ஏற்க தயாராக இருப்பதாக அவர் கூறினார்.

போதுமான எண்ணிக்கை மட்டுமே ஆட்சி அமைக்க முக்கியமானது என்று அவர் தெரிவித்தார்.

யாரும் ஆட்சி அமைக்க முடியாமல் இதே நிலை அடுத்த சில நாட்களுக்கு நீடித்தால், அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்று திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கூறினார்.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் தேக்க நிலை குறித்து அரசியல் கட்சிகள் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டு வருகின்றன.

திமுக சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் சென்னையில் அக்கட்சியின் தலைவர் திரு மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில், மற்றுமொரு தேர்தலுக்கு தமிழகம் உடனடியாக தயாராக இல்லை எனவும், மாநிலத்தில் நிலையான ஆட்சி அமைய வேண்டும்

என்பதே திமுக-வின் முதன்மையான நோக்கம் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தகைய சூழலில் முடிவுகளை எடுக்கும் அதிகாரம் கட்சித் தலைவருக்கு வழங்கப்படுவதாக இக்கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கட்சியின் செய்தித் தொடர்பாளர் திரு டி கே எஸ் இளங்கோவன், அஇஅதிமுக-விற்கு ஆதரவு அளிப்பது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று கூறினார்.

கட்சியின் தலைவர் திரு மு.க.ஸ்டாலின் எடுக்கும் முடிவுக்கு கட்சி முழு ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், தமிழக சட்டப்பேரவைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள அஇஅதிமுக உறுப்பினர்களுடன், புதுச்சேரியில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி நேற்று ஆலோசனை மேற்கொண்டார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய புதுச்சேரி யூனியன் பிரதேச அஇஅதிமுக செயலாளர் திரு அன்பழகன், தமிழக அரசியல் சூழல் குறித்தும், அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்தும் கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி உரிய முடிவை

மேற்கொள்வார் என்றும், எதிர்பாராத திருப்பங்கள் நிகழ வாய்ப்புகள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே, தவெக-வுக்கு ஆதரவு அளிப்பது குறித்து விடுதலை சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் இன்று ஆலோசனை மேற்கொள்ள உள்ளன.

<<<<<<<>>>>>>>>

தமிழகத்தில் பிளஸ் டூ தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்படுகிறது.

காலை ஒன்பதரை மணிக்கு தேர்வு முடிவுகள் இணையதளத்தில் வெளியிடப்படும் என்று அரசு தேர்வுகள் இயக்ககம் கூறியுள்ளது.

**tnresults.nic.in**

**dge.tn.gov.in**

உள்ளிட்ட இணையதள முகவரிகளில் தேர்வு முடிவுகள் வெளியிடப்படுகிறது.

தேர்வர்கள் இந்த இணையதளங்களில் தங்களது பதிவு எண் மற்றும் பிறந்த தேதியை பதிவு செய்து, தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகளிலும் தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம்.

மாணவர்கள் தங்களது உறுதிமொழி படிவத்தில் குறிப்பிட்டுள்ள கைபேசி எண்ணிற்கும், குறுஞ்செய்தி வாயிலாக தேர்வு முடிவுகள் அனுப்பப்படவுள்ளன.

வாட்ஸ் அப் செயலியில் **7 8 4 5 2 5 2 5 2 5** என்ற எண் மூலமாகவும் தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏதேனும் ஐயம் இருப்பின் தேர்வர்கள் **1 4 4 1 7** என்ற உதவி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மாணவர்கள் மற்றும் பெற்றோர் **1 4 4 1 7, 1 4 4 1 6** என்ற உதவி எண்கள் மூலமாக வழிகாட்டுதல்களை பெறலாம் என்றும் அரசு தேர்வுகள் இயக்ககம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

திருவாரூர் அருள்மிகு தியாகராஜர் சுவாமி திருக்கோவில் தெப்ப வெள்ளோட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் பங்கேற்றனர்.

கமலாலய திருக்குளத்தில் தெப்பத் திருவிழா இன்று முதல் மூன்று நாட்கள் நடைபெற உள்ளதாகவும், இதற்கென விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — 40 விஜயகுமார் - Sec. )***

<<<<<<<>>>>>>>

தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இன்று மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், மதுரை, தேனி, உள்ளிட்ட 19 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் பிற பகுதிகளின் ஓரிரு இடங்களில் லேசானது முதல், மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், குறைந்த பட்ச வெப்பநிலை 28 டிகிரி செல்சியஸ்ஸாகவும், அதிகபட்ச வெப்பநிலை 37 டிகிரி செல்சியஸ்ஸை ஒட்டியும் பதிவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரின் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் எனவும் அந்த மையம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் திரு மார்க்கோ ரூபியோ, வாட்டிகனில் போப்பாண்டவரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

----------------

இத்தாலியில் நடைபெறும் சர்வதேசக் கலைக் கண்காட்சியில் இந்திய அரங்கத்தை மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் திறந்து வைத்தார்.

----------------

திருவனந்தபுரத்தில் இரண்டு நாட்கள் நடைபெற்ற பிரிக்ஸ் நாடுகளின் வேலைவாய்ப்புப் பணிக் குழுக் கூட்டம் நேற்று நிறைவடைந்தது.

----------------

ஏல அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் 101 கனிமச் சுரங்கங்கள் செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு, மைல்கல் சாதனை எட்டப்பட்டுள்ளதாக மத்திய சுரங்க அமைச்சகம் தெரிவித்துள்ளது.

----------------

மேம்படுத்தப்பட்ட பயணிகள் முன்பதிவு நடைமுறைகளை ஆகஸ்ட் மாதத்தில் இருந்து செயல்பாட்டுக்குக் கொண்டு வருவது தொடர்பாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தலைமையில் புதுதில்லியில் நேற்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

----------------

கேரள மாநிலம் **Kazhakootta**-வில் நடைபெற்ற அகில இந்திய சைனிக் பள்ளி முதல்வர்கள் மாநாட்டில் பாதுகாப்புத் துறை இணையமைச்சர் திரு சஞ்சய் சேத் பங்கேற்றார்.

----------------

சென்னையில் **21** புறநகர் ரயில் நிலையங்களில் மின்சார வாகனங்ளுக்கான பேட்டரி மாற்றும் மையங்கள் மற்றும் சார்ஜிங் மையங்கள் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம் தெரிவித்துள்ளது.

----------------

இந்திய தர நிர்ணய அமைப்பின் அதிகாரிகள் குழுவினர் சென்னை சௌகார்பேட்டை பகுதியில் மேற்கொண்ட சோதனையில் **3** கடைகளில் தரமற்ற பொம்மைகள் கண்டறியப்பட்டு அவை பறிமுதல் செய்யப்பட்டன.

----------------

108 திருத்தலங்களில் ஒன்றான காஞ்சிபுரம் புஷ்பவல்லி தாயார் சமேத ஸ்ரீ அஷ்டபுஜ பெருமாள் திருக்கோயில் சித்திரை மாத பிரம்மோற்சவத்தில் 7ஆம் நாள் தேர் உற்சவம் நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றது

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணி 9 ரன் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வென்றது.

லக்னோவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், மழை குறுக்கிட்டதால் போட்டி 19 ஓவராக குறைக்கப்பட்டது.

முதலில் பேட் செய்த லக்னோ அணி, நிர்ணயிக்கப்பட்ட 19 ஓவர் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 209 ரன் எடுத்தது.

டக் ஒர்த் லூயிஸ் முறைப்படி வெற்றி இலக்கு 213-ஆக நிர்ணயிக்கப்பட்டது.

இதையடுத்து, பின்னர் விளையாடிய பெங்களூரு அணி, 19 ஓவர் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 203 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில், தில்லி அணி — கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

தில்லியில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

----------------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில், தில்லி அணி — ஒடிஷா அணியை எதிர்கொள்கிறது.

ஹைதராபாதில் இப்போட்டி மாலை ஐந்து மணிக்கு தொடங்குகிறது.

**<<<<<<<<END>>>>>>>>**